இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 91– திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 24 – ஞாயிற்றுக்கிழமை 10 நவம்பர் 2024 – சென்னை 16 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 91 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 24 - Sunday 10 November 2024 - Chennai 16 + 8 Pages ₹ 5.00


## விருதுநகர் மாவட்ட

# பட்டாசு ஆலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

## தொழிலாளர்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.11.2024) விருதுநகர் கன்னிசேரி புதூர், மேலச்சின்னையாபுரத்தில் உள்ள மதன் பயர் ஒர்க்ஸ் பட்டாசு தொழிற்சாலையை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், மாவட்ட ஆட்சித் தலைவர் வீ.ப. ஜெயசீலன், முதன்மை வெடிபொருள் கட்டுப்பாட்டு அலுவலர் கந்தசாமி, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இயக்குநர் ஆனந்த், மதன் பட்டாசு தொழிற்சாலையின் உரிமையாளர் நாகராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

**விருதுநகர், நவ. 10 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்றும் (9.11.2024), இன்றும் (10.11.2024) விருதுநகர் மாவட்டத்தில், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக வருகை தந்தபோது, விருதுநகரில் உள்ள மதன் பட்டாசு தொழிற்சாலையை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.**

விருதுநகர், கன்னிசேரி புதூர், மேலச் சின்னையாபுரத்தில் உள்ள மதன் பயர் ஒர்க்ஸ் பட்டாசு தொழிற்சாலையை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

### மகளிர் உரிமைத் தொகை கிடைக்கிறதா?

முதலமைச்சர் அவர்கள், ஆய்வு மேற்கொண்டபோது, தொழிற்சாலை பெற்றுள்ள உரிமச் சான்றினை ஆய்வு செய்து, அங்கு பட்டாசுகள் தயாரிப்பதற்கான இரசாயனப் பொருட்கள் வைப்பறை, தயாரிக்கப்படும் இடங்கள், பட்டாசுகள் வைப்பறை, மைக்ரோ கார்டு திரி வைப்பறை போன்ற இடங்களை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, சுமார் 80 பேர் பணிபுரியும் இத்தொழிற் சாலையில், 36 பெண்கள் பணியாற்றி வரும் நிலையில், அவர்களிடம் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கிறதா என்பதை கேட்டறிந்தார்.

இப்பட்டாசு தொழிற்சாலை இதுவரையில் விபத்து ஏற்படாமல் மிகுந்த பாதுகாப்புடன் செயல்பட்டுவருவதை கேட்டறிந்த முதலமைச்சர் அவர்கள், அனைத்து தொழிற்சாலைகளிலும் பசுமையான சூழலைப் பராமரிக்கவும், பாதுகாப்பு கட்டமைப்பு வசதிகளை மேலும் வலுப்படுத்தவும் அறிவுறுத்தினார்.

மேலும், இந்நிறுவனத்தின் உரிமையாளரிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பிற்கான முறையான காப்பீடு வசதியினை செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்திய தோடு, தொழிலாளர்களிடம் அவர்களது கோரிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

பின்னர், இத்தொழிற்சாலைக்கு வெளியே திரளாக கூடியிருந்த பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களையும் முதலமைச்சர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மதுரை விமான நிலையத்திலிருந்து சாலை வழியாக விருதுநகர் செல்லும் வழிநெடுகிலும் ஏராளமான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். முதலமைச்சர் அவர்கள், பொது மக்கள் அளித்த கோரிக்கை மனுக்களையும் பெற்றுக்கொண்டார்.

முதலமைச்சர் அவர்களின் ஆய்வின்போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், சட்டமன்ற உறுப்பினர் எ.ஆர்.ஆர்.சீனிவாசன், மாவட்ட ஆட்சித் தலைவர் வீ.ப. ஜெயசீலன், முதன்மை வெடிபொருள் கட்டுப்பாட்டு அலுவலர் கந்தசாமி, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இயக்குநர் ஆனந்த், மதன் பட்டாசு தொழிற்சாலையின் உரிமையாளர் நாகராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# முதலாளிகளின் கடன்களை தள்ளுபடி செய்யும் பா.ஜ.க.!

## ஜார்கண்ட் மாநில தேர்தல் பிரச்சாரத்தில் ராகுல்காந்தி கடும் விமர்சனம்!

*ராஞ்சி, நவ. 10 -*

முதலாளிகளின் கடன்களை தள்ளுபடி செய்யும் பா.ஜ.க., ஒரு போதும் விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்யாது என மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி கடுமையாக விமர்சித்துள்ளார்.



81 தொகுதிகளை கொண்ட ஜார்கண்ட் சட்டசபைக்கு வரும் 13 மற்றும் 20 தேதிகளில் இரண்டு கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது.

தேர்தலையொட்டி மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி சிம்டோகா பகுதியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

நடந்து முடிந்த அரியானா தேர்தலில், ஜாட் அல்லாதவர்களுக்கு எதிராக ஜாட்களை தூண்டிய பா.ஜ.க., தொடர்ந்து மத அடிப்படையில் மக்களை பிரிக்க முயற்சிப்பதாக விமர்சித்தார்.

பழங்குடியினர் மற்றும் தலித்துகளுக்காக குரல் எழுப்பினால், இந்தியாவை பிரிப்பதாக பா.ஜ.க. குற்றம் சாட்டுவதாக குறிப்பிட்டார்.

16 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் 25 முதலாளிகளின் கடன்களை தள்ளுபடி செய்த பா.ஜ.க., ஜார்கண்ட் விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்ததா என கேள்வி எழுப்பினார்.

பா.ஜ.க. முதலாளிகளின் கடனை தள்ளுபடி செய்வதால் விவசாயிகளின் கடனை பா.ஜ.க. ஒருபோதும் தள்ளுபடி செய்யாது என கூறினார்.

## பிளாஸ்டிக் சேகரிப்பு இயக்கம் திட்டத்திற்கு

# 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

*சென்னை, நவ. 10 -*

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளை உள்ளடக்கிய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாக ஒவ்வொரு மாதமும், 7 நாட்கள் தொடர்ந்து பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. அவ்வாறு சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள் மறு சுழற்சிக்கு அல்லது சிமெண்ட் தொழிற்சாலைகளில் எரி பொருளாக பயன்படுத்த அனுப்பப்படுகிறது.

இந்நிலையில், இதனை செயல்படுத்தும் பிளாஸ்டிக் சேகரிப்பு இயக்கம் திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இதில், சென்னை மாநகராட்சிக்கு 75 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மதுரை, கோவை, சேலத்திற்கு தலா 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் சேகரிப்பு இயக்கத்தினை ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் மேற்கொள்ள வேண்டும் என்றும், விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கான அட்டவணை மற்றும் உறுதி மொழிகள் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட வேண்டும் என்றும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2ஆம் கட்ட சென்னை மெட்ரோ ரயில் திட்டம்!

# சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் விறுவிறுப்பு!

*சென்னை, நவ. 10 -*

சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் 63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படுகிறது. மாதவரம் -சிப்காட் மார்க்கம், கலங்கரை விளக்கம்-பூவிருந்தவல்லி மார்க்கம், மாதவரம் - சோழிங்கநல்லூர் மார்க்கம் என மூன்று வழித்தடங்களில் 119 கிலோ மீட்டர் தூரத்தில் 128 ரயில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

இந்நிலையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தை விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்காக முழுவீச்சில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கலங்கரைவிளக்கம் - பூவிருந்தவல்லி வழித்தடத்தில், கோடம்பாக்கம் வரை சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

ராட்சத துளையிடும் இயந்திரத்தின் உதவியுடன் சுரங்கப்பாதை அமைக்கும் பணி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இப்பணிகள் விரைவில் நிறைவடையும் என அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.11.2024) விருதுநகர் கன்னிசேரி புதூர், மேலச்சின்னையாபுரத்தில் உள்ள மதன் பயர் ஒர்க்ஸ் பட்டாசு தொழிற்சாலையை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தொழிலாளர்களிடம் அவர்களது கோரிக்கை மற்றும் தேவைகள் குறித்து கேட்டறிந்தார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், மாவட்ட ஆட்சித் தலைவர் வீ.ப. ஜெயசீலன், முதன்மை வெடிபொருள் கட்டுப்பாட்டு அலுவலர் கந்தசாமி, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இயக்குநர் ஆனந்த், மதன் பட்டாசு தொழிற்சாலையின் உரிமையாளர் நாகராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.